**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.</u>**

**<u>முதலேற்பு வழக்கு எண். 77/2007</u>**

**<u>2026 ம் ஆண்டு ஏப்ரல்-18-ம் நாள் சனிக்கிழமை</u>**

பெயர் : ஜெயக்குமார்

சாட்சி : DW4

தந்தை பெயர் : நம்மாழ்வார்

நேரம் : 11.40A.M to 12.26 PM

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

1 .இந்த வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க குபேரன் அழைத்து வந்தார். இந்த வழக்கில் ராமனுஜம் வழக்குரையில் என்ன விவரம் கூறியுள்ளார் என்ற விவரம் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாதி தரப்பில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரமும் நான் தெரிந்து கொண்டேன். பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் மற்றும் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ராமானுஜம் இந்நீதிமன்றத்தில் என்ன வழக்கு, என்ன விவரம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் என்னென்ன ஆவணங்கள் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. ராமனுஜம் எந்த சொத்திற்காக , சர்வே எண்., சக்குபந்தி, மற்றும் விஸ்தீரணம் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண்., சக்குபந்தி, மற்றும் விஸ்தீரணம் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். சர்வே எண்.375/4 ஆகும். கிழக்கில் பாண்டுரங்கனின் நிலம் உள்ளது. மேற்கு மற்றும் தெற்கில் ராமனுஜம் படையாட்சியின் நிலம் அமைந்துள்ளது. வடக்கில் பாதை அமைந்துள்ளது.

2.. நான் பிராமாண வாக்குமூலத்தில் சொன்ன விவரங்கள் நான் கூறி தான் தயார் செய்யப்பட்டது. ராமனுஜத்திற்கு பாத்தியப்பட்ட சொத்திற்குண்டான ஆவணங்களை நான் வாங்கி பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் பாத்தியப்பட்ட சொத்திற்குண்டான ஆவணங்களை நான் வாங்கி பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் என்ன சொத்திற்காக வழக்கு நடந்து வருகிறது என்பதற்கு ஆவணங்களை எடுத்து நான் பார்த்தேனா என்றால் இல்லை. சர்வே எண்.375/4 ற்கு

உண்டான பழைய சர்வே எண்.92/6 ஆகும். மேற்படி சொத்திற்குண்டான பட்டா எண்.365. சர்வே எண்.375/4 ற்கு உண்டான பழைய சர்வே எண்.92/6 ஆகும். மேற்படி சொத்திற்குண்டான பட்டா எண்.365 ற்கு உண்டான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் அடங்கல் பார்த்துள்ளேன். எனது மாமனார் எழுமேடு கிராமத்தில் உள்ளார். நான் சின்னகரையான்புத்தூர் பாண்டிச்சேரியில் உள்ளது. நான் வசித்து வருகிறேன். எழுமேடுக்கும் சின்னகரையான்புத்தூர்க்கும் சுமார் 7 கிலோ மீட்டார் இருக்கும்.

3. என்னுடன் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் மொத்தம் 7 பேர் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் யாரேனும் எழுமேட்டில் வசித்து வருகிறார்களா என்றால் இல்லை. நான் மட்டும் தான் வசித்து வருகிறேன். எனக்கு 1992 ல் திருமணம் நடைபெற்றது. எனக்கு திருமணமான பிறகு எழுமேட்டில் சொத்து ஏதேனும் கிரையம் பெற்றேனா என்றால் வாங்கியுள்ளேன் ஆனால் அந்த சொத்து குறித்து வழக்கு உள்ளது. அந்தஅசல் வழக்கு 85/2003 ல் மாண்புமிகு பண்ருட்டி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு இருந்தது. மேற்படி எனது சொத்திற்குண்டான சர்வே எண்.87/16,15. 35 செண்ட் மற்றும் 40 செண்ட். எனது சொத்தின் பட்டா எண். எனக்கு தெரியாது. எனக்கு மற்றொரு சர்வே எண்ணிலும் சொத்து உள்ளது. அந்த சொத்திற்குண்டான சர்வே எண்.89/7,8,10,11,,13 மற்றும் 15. மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. அனைத்தும் சர்வே எண்களும் பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை மூலம் தான் பாத்தியப்பட்டது என்று நான் கூறினேன்.

4. நான் எழுமேடு கிராமத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் எந்த சொத்தும் வாங்கவில்லை. எனது மாமனார் கோவிந்தசாமி பெயரில் எழுமேட்டில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் சொத்து உள்ளது. என் மனைவி உடன் பிறந்தவர்கள் 2 சகோதரி 1 சகோதரர். யார் யார் என்னென்ன சர்வே எண் அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது மனையின் சகோதரர் சொத்தை அனுபவித்து வருகிறார். அவர் அனுபவித்து வரும் சொத்தின் சர்வே எண்.377/8,9 ஆகும். எனது மாமனார் பெண் குழந்தைகளுக்கு சொத்து ஏதும் கொடுக்கவில்லை. குபேரன் தனக்கு பாத்தியமான வழக்கு சொத்து 32 1/2 செண்ட் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று நான் என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் கிரைய பத்திரத்தை பற்றி எனக்கு நேரிடையாக எனக்க தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கிரைய பத்திரத்தில்

நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. 32 1/2 செண்டுக்கு யார் மூல உரிமையாளர் என்ற ஆவணத்தை நான் பார்த்து இருக்கேனா என்றால் பார்த்து உள்ளேன். கோபால் கவுண்டர் , ராமச்சந்திரன் மற்றும் இரு சகோதரர்கள் அவர்கள் பேரில் பத்திரம் வைத்து இருந்தார்கள். எந்த வருடம் வைத்து இருந்தார்கள் என்ற விவரம் தெரியாது. குபேரன் விற்பனை செய்தவர்களின் முந்தைய ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. ராமச்சந்திரன் என்பவரிடம் வாய்மொழியாக 7 1/2 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்று என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். எந்த வருடத்தில் வாங்கியுள்ளார் என்று எனக்கு தெரியாது. 7 1/2 செண்டிற்கு சக்குபந்தி எனக்கு தெரியும். ராமானுஜம் இடத்திற்கு கிழக்கு மற்றும் வடக்கு குபேரக் கிரையம் பெற்ற சொத்திற்கு மேற்கு பாதைக்கு வடக்கு. தற்போது சாட்சி பாதை வடக்கில் உள்ளது தெற்கில் 7 1/2 செண்ட் நிலம் உள்ளது. 7 1/2 செண்ட் நிலத்திற்கு யார் முன் பாத்தியஸ்தர்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

5. வாதி ராமனுஜம் வழக்கு சொத்தில் 25 செண்ட் தான் அனுபவித்து வருகிறார் என்று கூறிய நிலையில் அதற்குண்டான சக்குபந்தி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராமனுஜம் அனுபவிக்கும் இடத்திற்கும் பாதைக்கு தெற்கில் அமைந்துள்ளது. ராமனுஜம் இடத்திற்கு கிழக்குபுறம் குபேரன் சொத்து உள்ளது. மேற்கு புறம் ராமனுஜம் சொத்து உள்ளது, வடக்கு புறம் பாதை அமைந்துள்ளது, தெற்கில் ராமனுஜம் இடம் அமைந்துள்ளது. நான் ராமனுஜம் அனுபவிக்கும் சொத்து 25 செண்ட் என்று நான் தவறாக கூறுகிறேன் என்றாலும் ராமானுஜம் 60 செண்ட் அனுபவித்து வ ருகிறார் என்றால் சரியல்ல. 40 குபேரன் அனுபவித்து வருவது தவறு என்றால் சரியல்ல. 40 செண்டு தான் குபேரன் அனுபவித்து வருகிறார்.

6. எனக்கு வழக்கு சொத்து விவரங்களும் மற்றும் வழக்கு சொத்தின் அனுபவம் பற்றியும் தெரியுமா என்றால் தெரியும். எனக்கு வழக்கு சொத்து கிராமத்தில் சொத்தே கிடையாது என்றால் பதிவு செய்யப்பட்ட நிலம் கிடையாது. வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் பாதை கிடையாது என்றால் சரிதான். நானும் பிரதிவாதியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதி ராமனுஜம் வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் என்பதால் நான் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தாத்தா வைத்தியலிங்கம் 30.09.1897 ல் கிரையம் பெற்று அனுபவித்து வந்து அவர் இறப்பிற்கு பின்னிட்டு வாதியின் தகப்பனார் முத்து கிருஷ்ணன் அவர் இறப்பு

வரை அனுபவித்து வந்த பிறகு வாதி தான் தற்போது வரை அனுபவித்து வருகிறார் என்றால் முன்னோர்கள் அனுபவித்து வந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. தற்போது வாதி அனுபவித்து வரும் விவரம் தெரியும். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் பொய் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.**